# மூர்த்தி மேகவன்



காலை நேர இளஞ்சூரியன் வங்காள விரிகூடாவின் நிறத்தை உருகிய வெள்ளியாக மாற்றிக் கொண்டிருந்தது. இளங்கதிர்கள், அலைகளினால் அடிக்கப்பட்டு கரைசேர்ந்த சிதைந்த பொருட்களை ஒவ்வொன்றாக மும்முரமாக பொறுக்கி எடுக்கும் மனிதர்கள் மேல் படிந்து அவர்களை வெதுவெதுப்பாக்கிக் கொண்டிருந்தன. சில நிமிடங்களில் கடற்கரை தூய்மையாகப் பளீரென்று காட்சி அளிக்கிறது.

இந்தக் குழுவின் நடுவில், தலை நாயகனாக காட்சியளிக்கிறார் உயரம் சற்றுக் குறைந்தாலும் திடமான தேகக்கட்டுடன் இருக்கும் 36 வயதுடைய மூர்த்தி மேகவன். ‘கோவளம் புள்ளி கடற்கரை கடல் நீர் சறுக்கல் பள்ளி’யின் (Covelong Point Surfing School) கூட்டு நிறுவனராகிய இவரது அடக்க குணம், ‘இவரா முட்டுக்காடு - மஹாபலிபுரம் அலைவாய்க்கரையில் (Muttukkadu & Mahabalipuram Coastline) நம்பவே இயலாத பல சாதனைகளின் பின்னால் இயங்கிய சக்தி’ என நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது.

‘கடல் எப்பொழுதுமே எனது அங்கம்’ என்று வெற்றி தரும் புன்சிரிப்புடன் கூறும் இவர், தனது சித்தப்பாவுடன் தாம் மீன் பிடிக்கச் சென்ற காலங்களை நினைவு கூர்கிறார். 6 மரப்பலகைகள் இறுக்கமாகக் கட்டப்பட்டதே ‘கட்டுமரம்’ அந்தக் காலத்தில்.  நிறைய மீன்களைப் பிடித்து மற்றவர்கள் இறங்கி விட, மூர்த்தி மட்டும் கட்டுமரத்தின் மீது நின்றபடி இருந்தார். அப்பொழுது அடித்த ஒரு பேரலை, கட்டுமரத்தைத் தலைகீழாகக் கவிழ்த்தது. பலகைகளின் இடையே மூர்த்தியின் கால்கள், தொடை வரை மாட்டிக்கொள்ள, தண்ணீரின் அடியில் தலைகீழாக மாட்டிக் கொண்டார் மூர்த்தி. தற்செயலாக மூர்த்தியின் சித்தப்பா திரும்பிப்பார்த்து, இன்னொரு அலை வந்து அடித்துச் செல்வதற்கு முன், நீரில் குதித்து அவரைக் காப்பாற்றினார். தெய்வாதீனமாக நடந்த செயல் இது என்றுதான் கூறவேண்டும். நான் சிறிதும் பயப்படவில்லை’ என்று யதார்த்தமாகக் கூறுகிறார் மூர்த்தி.

சிறு வயதிலேயே தந்தையார் குடும்பத்தைக் கைவிட்டுச் செல்ல, நகரத்தில் இருந்து சம்பாதிக்க தாயார் முடிவெடுக்க, இவரையும், இவரது இரு தமக்கைகளையும், வளர்த்தது இவர்களது தாத்தாவும் பாட்டியும். ‘மீனவர்களுடன் வளர்ந்தது மகிழ்ச்சியை அளித்தாலும், கடினமாகவே இருந்தது’ என்று கூறுகிறார் மூர்த்தி. பாட்டனாரும், மாமாக்களும் திறமை வாய்ந்த மீனவர்களாக இருந்தனர். நாங்கள் என்றுமே பட்டினி கிடந்ததில்லை. எனினும், பெற்றோர் இல்லாதது கஷ்டமாகத்தான் இருந்தது, என்று தொடர்கிறார். பள்ளியை வெறுத்ததால், 6 ஆம் வகுப்போடு படிப்பை நிறுத்திய இவர் தாம் ஒரு ‘பக்கா மீனவனாக’ இருந்ததாகக் கூறுகிறார். எங்கெல்லாம் பாறைகள் இருக்கும், எங்கெல்லாம் வளமான மீன்கள் இருக்கும் என்று மிக நன்றாகவே எனக்குத் தெரியும். கடல் நண்டுகளைப் பிடிப்பதில் நிபுணன் நான் என்றும் தொடர்ந்து கூறுகிறார்.

பிறருக்கு உதவி செய்வது என்பது இவரது பிறவிக்குணம். மன நிலை பாதிக்கப்பட்டவர்களைப் பேணிக் காக்கும் ‘தி பான்யன்’ (The Banyan) எனும் அரசு சாரா அமைப்பில் (NGO) சேர்ந்தார். பணியின் இடையே, மீன் பிடிப்பது நண்பர்களுடன் கடலில் பலகையில்லாமல் மிதப்பது (Body Surfing), அல்லது கரையில் வெறுமனே அமர்வது, என கடலுடன் செலவழிப்பதற்கு நேரம் இவருக்கு எப்பொழுதுமே இருந்தது.



ஒருமுறை 2001 ஆம் ஆண்டு இப்படி கடற்கரையில் அமர்ந்து கொண்டிருக்கும் பொழுதுதான், இவரைக் கவர்ந்திழுத்த ஒரு வித்தியாசமான நிகழ்வினை காண நேர்ந்தது. ஆரஞ்சு நிற ஆடை அணிந்த சில அயல் நாட்டுக்காரர்கள் (‘ஹரே கிருஷ்ணா’ இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று பிறகு இவருக்குத் தெரிந்தது), அலைகளின் மீது பலகைகள் வைத்து நகர்ந்து கொண்டிருந்தார்கள். மிக உயரமான ஒருவர்



(‘கடல் நீர் சறுக்கு சுவாமி’ என்று இப்பொழுது அவரை அழைக்கிறார் மூர்த்தி) கரைக்கு வந்து சிறிது நேரம் இளைப்பாற வந்தவுடன், அந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தித் தமக்குத் தெரிந்த உடைந்த ஆங்கிலத்திலும், சைகையிலும், ‘அந்தப் பலகையை’ சிறிது நேரம் பயன்படுத்த அனுமதி கேட்டார் மூர்த்தி. உயரம் குறைந்து காணப்பட்ட மூர்த்தி, 9 அடி நீளமான பலகையைத் தள்ளிக் கொண்டு சென்று, மற்றவர் செய்ததுபோல நீரில் அளைந்து கொண்டு, அலையின் மீது பலகையுடன் நின்ற காட்சியை ஆவலுடன் பார்த்தார் அந்த சுவாமி. திரும்பத் திரும்பப் பலமுறை சறுக்கியதைக் கண்டு, அவர் எங்கே கடல் நீர் சறுக்கலைக் கற்றுக் கொண்டார் என சுவாமி வினவ, ‘இதுவே முதல் முறை’ என்ற மூர்த்தியின் பதில் அவரை வியப்படைய வைத்தது. மூர்த்திக்கும், கடல் நீர் சறுக்கலுக்கும் தொடங்கிய காதல் கதை இது என்று அப்பொழுது சுவாமி அறிந்திருக்கவில்லை.

முறையாக செய்யப்படாத பலகைகளை வைத்து கடல் சறுக்கலில் ஈடுபட்ட மூர்த்தி, ஆஸ்திரிலேயர் ஒருவர், உள்ளூர் சிறுவன் ஒருவனுக்கு ஒரு சிறிய கடல் நீர் சறுக்கல் பலகையைப் பரிசாக அளித்ததைக் கேள்விப்பட்டார். அதன் மதிப்பு பற்றி சற்றும் அறிந்திராத அந்த சிறுவனிடமிருந்து 1500 ரூபாய்க்கு அதனை வாங்கினார் மூர்த்தி. அவ்வளவு பெரிய தொகையை ஒரு சிறிய பலகைக்காக செலவழித்ததற்காக, தனது தமக்கையிட மிருந்து நன்றாக வாங்கியும் கட்டிக் கொண்டார். எனினும், தாம் செய்தது சரியே என நம்பினார்.

கயிறு இல்லாத அந்தப் பலகைக்குக் கயிறைக் கட்டி, ‘கடல் நீர் சறுக்கலை’த் தொடங்கினார். தாமே அந்த விளையாட்டை சுயமாகக் கற்றுக்கொண்டதால்,ஒரு வேடிக்கையான பாணி தமக்கு இருந்ததாக நினைவு கூர்கிறார் அவர். கோவளம் கடற்கரைக்கு வந்து செல்லும் கடல் நீர் சறுக்கர்களுடன் நட்பு கொண்டு அவர்களிடம் கற்று சிறிது சிறிதாக முன்னேற்றம் அடைந்தார். அவ்வாறு அங்கு வந்த கடல் நீர் சறுக்கர்களில் ஒருவர், இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்தவரும் சென்னையில் ஒளிப்பட நிலையம் (Studio) ஒன்றை நடத்தும் யோடம்.

யோடமின் பெரிய பலகையை சிறிது நேரம் கடனாகப் பெற்று, தொடர்ச்சியாக 5 அலைகள் மீது சறுக்கல் நடத்திய மூர்த்தியை கரகோஷத்துடன் உற்சாகப்படுத்தினர் அங்கு குழுமியிருந்த மக்கள். தனது பலகையை மூர்த்திக்கே பரிசாக அளித்த யோடம், மூர்த்தியின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணித்தார். ஒவ்வொரு முறை அவர் திரும்பி வந்த பொழுதும், உள்ளூரைச் சேர்ந்த ஒரு பையனாவது மூர்த்தியிடம் கடல் நீர் சறுக்கு கற்றுக் கொண்டிருப்பதைக் கண்டார். இது அவரை உள்ளூர் கடல் சறுக்கர்களுக்கு உதவி செய்வதற்கு நிதி திரட்டும் முகமாக மூர்த்தியின் கதையைக் கூறும் காணொளி (Video) ஒன்றைத் தயாரிக்கத் தூண்டியது.

மூர்த்தியும், உள்ளூர் கடல் நீர் சறுக்குபவர்களும் வெகு வேகமாக முன்னேற ஆரபித்தார்கள். 2011ஆம் ஆண்டில் மூர்த்தியும், கோவளத்தைச் சேர்ந்த மூன்று பேரும் மஹாபலிபுரத்தில் நடைபெற்ற முதலாவது அகில உலக கடல் நீர் சறுக்கல் போட்டியில் பங்கு பெற்றனர். பல தேர்ந்த போட்டியளர்களைத் தோற்கடித்த மூர்த்தி, பந்தயத்தின் இறுதிச் சுற்று வரை வந்து, இரண்டாவதாக வந்தார். முதல் பரிசு பெற்றவர் ஸ்பெய்ன் நாட்டைச் சேர்ந்த ஒருவர். மூர்த்தியின் கதை பல நாளிதழ்களிலும் வந்து, பலரது கவனத்தையும் கவர்ந்தது.

இந்த சமயத்தில், நீர் விளையாட்டில் அதிக ஆவல் உள்ளவரும், டி.டி. குழு நிறுவனங்களின் தலைவரும் நிர்வாக இயக்குனருமான அருண் வாசுவின் நட்பு இன்னொரு நண்பரின் மூலம் யோடமிற்குக் கிடைத்தது. மூர்த்தியைப் பற்றியும், அவரது கனாவாகிய ‘கடல் சறுக்கு பள்ளி’ பற்றியும் அருணிடம் கூறினார் யோடம்.

‘‘முதல் முறையாக மூர்த்தியை சந்தித்தவுடன், அவரைப் பற்றி நன்கு அறிய எனக்கு பத்தே நிமிடங்கள்தான் தேவைப்பட்டது. ‘கோவலம் செயல் திட்டத்திற்கு’ (Covelong Project) நான் உதவி செய்து உபயம் செய்ய வேண்டும் என்று திட்டவட்டமாக முடிவு செய்தேன், என்று கூறும் அருண், தொடர்ந்து, அவர் உண்மையானவர், இதயத்திலிருந்து பேசுபவர், நல்ல கனவு ஒன்றை வைத்திருப்பவர். ஒரு முறை கூட பணம் சம்பாதிப்பது பற்றி அவர் பேசவில்லை. ‘கடல் நீர் சறுக்கல்’ அவருக்கு ஒரு தெளிவான நோக்கையும், சிந்தனையையும் அளித்திருந்தது. அவரது கிராமத்திலிருக்கும் இளைஞர்களிடம் இதனைப் பகிரவும், அவர்களுக்கு இதனைக் கற்றுக்கொடுக்கவும் விழைந்தார் அவர். இதன் மூலம், அவர்களுக்குப் படிந்துள்ள தீய பழக்க வழக்கங்கள் கண்காணாமல் மறைந்து விடும் என நம்பினார். இது என் நெஞ்சைத் தொட்டது. அவருக்குப் பலவிதங்க்களில் நான் வழிகாட்டியாக இருந்தாலும், உண்மையைச் சொல்வதென்றால் அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை நிறையவே இருக்கின்றன, என்கிறார்.

அருணுக்கும் மூர்த்திக்கும் நிகழ்ந்த இந்த சந்திப்பின் விளைவுதான் 2012 இல் தொடங்கப்பட்ட ‘கோவலம் புள்ளி கடல் நீர் சறுக்கு செயல் திட்டம்’ (Covelong Point). அரசு சாரா இயக்கமாகிய பான்யனிலிருந்து ராஜினாமா செய்த மூர்த்தி, டி.டி. குழு வின் (TT Group) பின்பலத்துடன் தொடங்கப்பட்ட இந்த செயல் திட்டத்தில் முழுமூச்சாக இறங்கினார். ஒரு சிறிய வாடகை வீட்டில் தொடங்கிய இது, இப்பொழுது கடல் நீர் சறுக்கல் மற்றும் 'ஸ்கூபா' (SCUBA) உள்பட பல நீர் விளையாட்டுகளில் முறையாகப் பயிற்சி அளிக்கும் ஒரு பெரிய பள்ளியாக உருவாகி இருக்கிறது. இது தவிர, இரவு தங்குவதற்கு வசதியான அறைகளை உள்ளடக்கிய உணவகமும் இங்கு இருக்கிறது. இங்கு உள்ளூர் மக்கள் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விஷயம்.

இந்தப் பயணத்தில் பல சவால்களை சந்தித்திருக்கிறார் மூர்த்தி. 2013 ஆம் ஆண்டில், ஊர் சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் இவரை மடக்கி, ஒரு மிகப்பெரிய தொகை ஒன்றினைத் தருமாரு மிரட்டியது ஒரு மிகப் பெரிய சவால் எனக்

கொள்ளலாம். அயல் நாட்டினரின் தொடர் வருகை, ஊடகங்களில் அடிக்கடி பெயர் வருவது, மற்றும் விலையுயர்ந்த சாதனங்கள் இவற்றை வைத்து, மூர்த்தி நிறைய பணம் சம்பதிப்பதாகத் தப்புக்கணக்கு போட்ட பொறாமை பிடித்த சிலர், தங்களுக்கும் 'அந்தத் தொகையில்' பங்கு கேட்க முனைந்தனர். தாம் அவ்வளவு பணம் எதுவும் சம்பாதிப்பதில்லை எனக் கூறிய மூர்த்தி, தம்மால் பலருக்கும் வேலை வாய்ப்பு கிட்டியிருப்பதையும், நன்றாகப் பராமிக்கப்பட்ட கடற்கரையினால் சுற்றுலா பயணிகளின் வரவு அதிகரித்திருப்பதையும் சுட்டிக்காட்டினார். அருண் மற்றும் உள்ளூர் காவல் அதிகாரிகளின் தலையீட்டினாலும், உள்ளூரைச் சேர்ந்த பலரும் கடல் நீர் சறுக்கில் ஈடுபட ஆரம்பித்ததனாலும், இந்தப் பிரச்சினை சிறிது சிறிதாக மறைந்தது.எனினும், காயங்கள் ஆறுவதற்கும், உறவுகள் பலப்படுவதற்கும் சில காலம் பிடித்தது.

அபாயங்கள் நிறைந்தது கடல். மூர்த்தியும் மற்ற மாணாக்கர்களும் முறையாகப் பயிற்சி பெற்றதோடு மட்டுமல்லாமல், சான்றிதழும் பெற்றிருக்கிறார்கள். கடல் நீர் சறுக்கலில் ஈடுபடுபவர்கள், கடலின் சக்தியையை மதிக்கவும், சறுக்கும் இடங்களைப் பற்றிய முழு விவரமும் அறிதல் முக்கியம். அவர்கள் கடலில் இறங்குவதற்கு முன் அவர்களுக்கு உரிய பயிற்சியினையும், ஆணைகளையும் அளிக்கிறோம்'', என்கிறார் மூர்த்தி. 'டைட்' (Tide), 'வின்ட் டைரக்ஷன்' (Wind Direction), 'ஸ்வெல்' (Swell) 'ரிப் டைரக்ஷன்' (Rip Direction) போன்ற வார்த்தைகள் அவர்களது உதடுகள் மிக அசாதரணமாக உதிர்க்கின்றன.


அங்கு பயிற்சியாளர்களாகப் பணிபுரியும் இளைஞர்கள், மீன் பிடிக்கும் தொழிலுக்கோ அல்லது அலுவலகத்தில் பணி புரியவோ (ஒரு இளைஞர், பொறியாளர் படிப்பில் பட்டதாரி) ஏன் செல்லவில்லை என்று வினவியதற்கு, மூர்த்தியின் பதில் - 'மீன் பிடிக்கச் சென்றால் கிடைப்பது மீன் மட்டுமே. மீன் பிடிக்கச் செல்லதா  நேரங்களில், சீட்டு விளையாடுதல், சூதாடுதல், மது பானங்கள் அருந்துதல் போன்ற தவறான வழிகளில் அவர்கள் செல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகம். இங்கு அவர்களுக்குத் தேவையான சம்பாத்தியம் கிடைப்பதோடு மட்டுமன்றி, அவர்களுக்கு மிகவும் பிடித்தமான விஷயத்தில் ஈடுபடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கடல் நீர் சறுக்கல் பயிற்சியாளராகள் தமது உடலை முதலில் மதிக்க வேண்டும். மது அருந்துவதோ, புகைபிடிப்பதோ அறவே இருக்க முடியாது.''

சென்னையிலிருந்து பல பெண்கள் கடல் நீர் சறுக்கு விளையாட்டு விளையாடுவதற்காக வந்தாலும், உள்ளூர் மீனவ சமூகத்திலிருந்து எந்தப் பெண்ணும் வராதது மூர்த்திக்கு மனவருத்தத்தை அளிக்கிறது. கடல் நீர் சறுக்கலுக்காக அணியப்படும் பிரத்தியேக ஆடை ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம் என்று அவர் கருதுகிறார். பெற்றோர்களுக்கும் தமது பெண்கள் இவ்விளையாட்டில் ஈடுபட்டால் வெயிலில் அலைய வேண்டி வரும், அதனால் அவர்களுக்குத் திருமண வாய்ப்புகள் குறையும் என்று நினைக்கிறார்கள். இதுபோன்ற சமூக நிலைப்பாடுகளைத் தகர்த்தெறிய, நிறையவே உழைக்க வேண்டியது அவசியமாகிறது.

சர்வதேச போட்டிகளில் பங்கு பெற்ற இளைஞர்கள், புகழாரத்தைத் தவிர பரிசுத் தொகைகளையும் சம்பாதித்துள்ளனர். அந்தப் பரிசுத் தொகை அவர்களுக்குத்தான் என்றாலும், அதில் ஒரு சிறிய பகுதியை மீனவ சமூகத்தைச் சேர்ந்த குழந்தை ஒன்றின் கல்விக்காக அளிக்குமாறு மூர்த்தியும், அருணும் கோருகிறார்கள். அண்ணா நகருக்கோ, அமிஞ்சிகரைக்கோ சென்றிருக்கிறார்களோ இல்லையோ, இந்த இளைஞர்கள், ஃபிஜி, அபுதாபி, இலங்கை, அந்தமான் முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் கற்றுக்கொண்டுள்ள இவ்விளைஞர்கள், பல தரப்பட்ட மக்களுடன் மரியாதையுடன் உரையாடுகிறார்கள். பெரும்புள்ளிகளும், திரைப்பட நடிகர்களும் இதில் அடக்கம். 'கடல் நீர் சறுக்கல்' கற்றுக்கொள்ள வரும்பொழுது,  நாங்கள் பயிற்சியாளர்கள், அவர்கள் மாணவர்கள் எங்களை மதித்து நண்பர்கள் போல் அவர்கள் நடத்துகிறார்கள்.

பயிற்சியாளர்களாகப் பணி புரியும் பழனி மற்றும் தரணி, மூர்த்திக்கு புகழாரம் சூட்டி, அவர் தங்களை ஊக்குவித்ததை நன்றியோடு நவில்கிறார்கள். ''வெளி   நாடுகளுக்கு நாங்களே சென்று போட்டிகளி பரிமளிக்க முடியும்'' என்று ஆர்வத்துடன் கூறுகிறார் பழனி. இங்கு பணி புரிவதாலேயே இது போன்ற சந்தர்ப்பங்கள் வாய்க்கின்றன.

நமது மாநிலத்திற்கும், சென்னை நகரத்திற்கும் கிடைத்த பொக்கிஷங்கள்  கடலும், கடற்கரைகளும். மூர்த்தியும் அவரது குழுவும் தூய்மைக்கும், பாதுகாப்புக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கடற்கரைத் தூய்மை ஒவ்வொரு பஞ்சாயத்தின் பொறுப்பு என மூர்த்தி



கருதுகிறார்.எனினும், தூய்மையுணர்வு, மாலை வேளைகளிலும், வார இறுதி விடுமுறைகளிலும் கடற்கரைக்கு வந்து, குப்பைகளுக்கென தொட்டிகள் இருந்தும், அவற்றில் குப்பைகளைப் போடாமல், கடற்கரை எங்கும் வாரி இறைத்துவிட்டுச் செல்லும் பொதுமக்களுக்குக் கண்டிப்பாக வர வேண்டும் என்று கூறும் இவர், சில சமயங்களில், குப்பைகளை இறைக்கும் நபர்களின் தலையிலேயே அந்தக் குப்பைகளைக் கொட்ட வேண்டும் என்று எனக்குக் கோபம் வரும், எனக் குமுறுகிறார்.

'நீர்ப் பாதுகாப்பு' (Water Safety) பற்றியும், தமிழகத்தில், பலரும் கடலில் மூழ்குவது பற்றியும் தொடர்ந்து பேசுகிறார் இவர். கோவளம் கடற்கரையைப் பொறுத்த வரை, ஒருவர் கூட மூழ்காதது, மூர்த்தி மற்றும் அவரது குழுவின் கண்காணிப்பினால்தான். அரசாங்கத்திடம் அவர் கோருவது, மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்களை 'உயிர் காப்பாளர்' களாக (Life Guards) களாக நியமிப்பது, காப்பாற்றும் சாதனங்கள் (Rescue Equipments), அங்கங்கு 'கண்காணிக்கும் கோபுரங்கள்' (Watch Towers) நிறுவுவது - போன்றவை. இவர்களை விட கடலை நன்கு அறிந்தவர்கள் யாரும் இருக்க முடியாது. எனவே, இந்தப் பணியினை மிக நேர்த்தியாக செவ்வனே இவர்கள் செய்வார்கள். 2015 இல் சென்னை மாநகரமே வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த பொழுது, பலரையும் காப்பாற்றியவர்கள் மீனவர்கள்தான். மூர்த்தியும், அவரது குழுவும், வெள்ளம் சூழ்ந்த பள்ளிகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும், சிறிதும் அயராமல், பலரையும் காப்பாற்றினார்கள். வெள்ளம் இல்லாத சமயங்களிலும் மற்றவர்களைக் காப்பாற்ற இவர்களுக்கு ஏன் நாம் ஆதரவளிக்கக் கூடாது?

உள்ளூர் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 45 பேர்கள் இப்பொழுது கோவளத்தில் கடல் நீர் சறுக்கு விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். மூர்த்தி மற்றும் அவரது குழுவின் பயிற்சி முறையினையும், தொடர் ஊக்கத்தையும், நேர்மறையான சிந்தனையையும், அவரிடம் பயிலும்/பயின்ற மக்கள் புகழ்ந்து தீர்க்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும், இது பெரிய சாகசங்கள்  நிறைந்த ஒரு விளையாட்டு.

அவரது வாழ்வின் தத்துவம் என்ன என்று வினவியதற்கு, ''கனாக் காண் ; நம்பு ; சாதனைகள் செய்'', என்று சிறிதும் தயக்கமில்லாமல் விடையளிக்கிறார், நீ விரும்புவதைச் செய். மற்றவர்களை ஆதரி. நேர்மையுடன் இரு, செயல்படு.



வித்தியாசமான, அதே சமயத்தில் அருமையான கடல் நீர் சறுக்கல் என்ற விளையாட்டை சென்னைக்கு அருகே உள்ள கடற்கரையில் பிரபலப்படுத்தி, உள்ளூர் மீனவ சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களைப் பேணி, அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தி, அலவாய்க்கரை மீதும், கடல் மீதும் பெரும் அக்கறை காட்டி, பல சாதனைகள் புரிந்துவரும் மூர்த்தி மேகவன், சென்னையின் முதன்மை சான்ற வெற்றி வீரர்!